நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆண்டிபட்டி.

முன்னிலை – திரு.அ. பாசில் முகமத், பி.பி. ஏ.,எல்எல்.பி.
நீதித்துறை நடுவர்
ஆண்டிபட்டி.
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 175/2014

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
க.விலக்கு காவல் நிலையம்,
குற்ற எண்.316/2013. குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

தனேஷ்
எதிரி

**வழக்கின் சுருக்கம்**

| வ. எண் | விவரம் | |
|---|---|---|
| 1. | இருதரப்பினர்களின் பெயர்கள் | |
| | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>க.விலக்கு காவல் நிலையம், | எதிரி:<br>தனேஷ் |
| 2. | எதிரியின் வயது | 34 |
| 3. | தந்தை/கணவர் பெயர் | த.பெ.சசி |
| 4. | மதம் | இந்து |
| 5. | தொழில் | ஓட்டுநர் |
| 6. | முகவரி | கோட்டநாடு |
| 7. | தாலுகா, மாவட்டம் | பாலகாடு , கேரளா |
| 8. | சம்பவம் நிகழ்ந்த நாள் | 16.12.2013 |
| 9. | கைது | 16.12.2013 |



FAZIL
MOHAMED H
Digitally signed by
FAZIL MOHAMED H
Date: 2026.03.27
19:11:31 +0530

| | | |
|---|---|---|
| 10. | பிணையில் விடுவித்தல் | 17.12.2013 |
| 11. | எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள் | 1 நாள் |
| 12. | இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 22.05.2014 |
| 13. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | 16.06.2014 |
| 14. | கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் நகல் வழங்கப்பட்ட தேதி | 02.12.2014 |
| 15. | கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 04.12.2014 |
| 16. | விசாரணை துவக்கம் | 05.03.2015 |

17.சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்

| Witness | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 05.03.2015 | 20.08.2015 |
| PW2 | 05.03.2015 | 20.08.2015 |
| PW3 | 21.04.2015 | 21.04.2015 |
| PW4 | 26.03.2026 | 26.03.2026 |
| PW5 | 26.03.2026 | 26.03.2026 |

| | | |
|---|---|---|
| 18. | விசாரணை முடிவு | 26.03.2026 |
| 19. | கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 27.03.2026 |
| 20.பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள் | | - |
| 21. | தீர்ப்பு விவரம் | விடுதலை. |
| 22. | தீர்ப்புரை நகலை வழங்குதல் | ஆம். |
| 23. | தலைமறைவாக இருந்த எதிரியின் விவரங்கள் | - |



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:11:37 +0530

| | | |
|---|---|---|
| 24. | மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு | இல்லை. |
| 25. | பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு | இல்லை. |
| 26. | காலதாமதத்திற்கான காரணம் | இல்லை |

*****

இவ்வழக்கானது, கடந்த 22.05.2014 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னால் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.முத்துசெல்வம் அவர்களும் முன்னிலையாகி, முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், அரசு தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>தீர்ப்புரை</u>

1). <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

கடந்த 16.12.2013 ம் தேதி 20.45 மணிக்கு தேனி–க.விலக்கு மெயின்ரோட்டில் குன்னூருக்கு கிழக்கே துரைராஜ் வாத்தியார் தோட்டம் அருகில் எதிரி KL 46 F 5455 என்ற எண் கொண்ட பஸ்ஸை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிகவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகனம் ஓட்டி வந்து எதிர்திசையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டின் இடது ஓரமாக சதீஷ் ஓட்டி வந்த TN 59 AC 1695 என்ற எண் கொண்ட TVS விக்டர் இருசக்கர வாகனத்தை மீது மோதி விபத்து ஏற்படுத்தியும் விபத்தில் சதிஷ்க்கு வலதுகால் இடது கால் மொழியிலும் இடுப்பின் இடது பக்கம் இடது கை வலது கை மார்பில் வலது



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:11:43 +0530

தோள்பட்டையில் நெற்றி மூக்கில் வயிற்றில் காயத்தையும் வண்டியில் பின்னால் உட்கார்ந்து சென்ற முருகானத்திற்கு இடுப்பின் இடதுபக்கம் இடதுகால் மொலி இடதுகால் பாதம் வலதுகை மொலி தலையில் காயங்கள் ஏற்படுத்தியும் இருவருக்கும் தலையில் பலத்த காயத்தை ஏற்படுத்தியும் இருவருக்கும் இறப்பை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரியின் மீது இ.த.ச பிரிவு 304(A)-ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என்று கு.வி.மு.ச பிரிவு 173-ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2).இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு எதிரி ஆஜரானபோது வழக்காவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, அரசு தரப்பு வழக்கில் குற்ற முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவு 304(A) ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றத்தின் சாரம்சம் குறித்து எதிரிக்கு படித்துக் காட்டி வினவியுள்ளபோது, எதிரி தான் குற்றவாளி இல்லை என்றும், பொய் வழக்கு என்றும் கூறியுள்ளார். எனவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

3). <u>அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:</u>

3.1)இவ்வழக்கில் அ.த.சா.**1** புகார்தாரர் ஆவார். சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.**2** சம்பத்தை நேரில் பார்த்த சாட்சி ஆவார். **அ.சா.3** சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சி ஆவார். **அ.சா.4** பார்வை மகஜர் சாட்சி ஆவார்.

3.2)**அ.த.சா.5** புலன்விசாரணை அதிகாரி ஆவார். **அ.த.சா.ஆ 3** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியம் வழக்கு விசாரணைக்கு



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:11:47 +0530

எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ 4** தயார் செய்தது குறித்தும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு **அ.த.சா.ஆ 5** மற்றும் **அ.த.சா.ஆ.6 பிரேத விசாரணை அறிக்கை** தயார் செய்தது குறித்தும் விபத்து வாகனங்களான TN 46 F 5455 என்ற டூரிஸ்ட் பஸ் மற்றும் TN 59 AC 1695 TVS Victor வாகனத்தினை வாகன ஆய்வாளரிடம் ஆய்வுக்கு உட்படுத்தி பின்பு மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.7 மற்றும் அ.த.சா.ஆ 8** பெற்றது குறித்தும் பின்பு இறந்துபோன சதீஷ் மற்றும் முருகானந்தம் என்பவர்களுக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.9 மற்றும் அ.த.சா.ஆ 10** பெற்று பதிவு செய்தது குறித்தும், பின்னதாக புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்து குறித்தும் சாட்சியம் அளித்தார்.

4).அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5).அரசுத்தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள பொருண்மைகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவியபோது, அரசு தரப்பு சாட்சியத்தை எதிரி பொய் சாட்சியம் என்றும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார்.

6).இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு சாட்சியங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:11:52 +0530

**7.அரசு தரப்பு வாதம்**

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது, அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சியங்களின்படியும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களின்படியும், எதிரி மீதான அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

**8. எதிரி தரப்பு வாதம்**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பு எதிரியின் கவனக்குறைவால் தான் வாகன விபத்து ஏற்பட்டது என்றும் அதன் விளைவாக சதீஷ் மற்றும் முருகானந்தம் இறந்து போனார்கள் என்றும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்றும் ஆகையால் இவ்வழக்கின் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

9. <u>தீர்க்கபட வேண்டிய பிரச்சனைக்குரிய கேள்வி</u>

இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான இ.த.ச.பிரிவு304 (A) (2 Count) IPC கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

10.<u>முடிவுக்கான விளக்கம்</u>

10.1)இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

10.2)அரசு தரப்பு வழக்கானது எதிரி KL 46 F 5455 என்ற எண் கொண்ட பஸ்ஸை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிகவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகனம் ஓட்டி வந்து எதிர்திசையில்



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:11:57 +0530

கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டின் இடது ஓரமாக சதீஷ் ஓட்டி வந்த TN 59 AC 1695 எண்ற எண் கொண்ட TVS விக்டர் இருசக்கர வாகனத்தை மீது மோதி விபத்து ஏற்படுத்தியும் விபத்தில் சதிஷ்க்கு வலதுகால் இடது கால் மொழியிலும் இடுப்பின் இடது பக்கம் இடது கை வலது கை மார்பில் வலது தோள்பட்டையில் நெற்றி மூக்கில் வயிற்றில் காயத்தையும் வண்டியில் பின்னால் உட்கார்ந்து சென்ற முருகானத்திற்கு இடுப்பின் இடதுபக்கம் இடதுகால் மொலி இடதுகால் பாதம் வலதுகை மொலி தலையில் காயங்கள் ஏற்படுத்தியும் இருவருக்கும் தலையில் பலத்த காயத்தை ஏற்படுத்தியும் இருவருக்கும் இறப்பை ஏற்படுத்தியது என்பதே ஆகும்.

**10.3)அ.த.சா.ஆ.7** மற்றும் **அ.த.சா.ஆ.8** மோட்டார் வாகன ஆய்வறிக்கையை மற்ற சாட்சியங்களோடு ஒப்புவித்து ஆராய்ந்து பார்க்கையில் சம்பவத்தன்று TN 46 F 5455 என்ற டூரிஸ்ட் பஸ் மற்றும் TN 59 AC 1695 TVS Victor என்ற வாகனங்கள் விபத்துக்குள்ளானது நிரூபணம் ஆகிறது.

**10.4)அ.த.சா.ஆ.9** மற்றும் **அ.த.சா.ஆ.10** பிரேத பரிசோதனை அறிக்கைகள் மற்றும் பிரேத விசாரணை அறிக்கைகள் மற்றும் மற்ற சாட்சிகளோடு ஒப்புவித்து பார்க்கையில் விபத்தின் காரணமாக சதீஷ் மற்றும் முருகானந்தம் இறந்தது நிரூபணம் ஆகிறது.

10.5) மேலும் **அ.த.சா.ஆ.7** மோட்டார் வாகன ஆய்வறிக்கையினை பார்க்கும்போது எதிரிதான் வாகனத்தினை இயக்கியது தெரியவருகிறது. மேலும் எதிரி தரப்பிலும் எதிரி தான் வாகனத்தை ஓட்டினார் என்பதை மறுதலிக்கவில்லை.

10.6)ஒரு வழக்கில் இ.த.ச.பிரிவு 304 (A) IPC கீழான குற்றச்சாட்டை நிரூபிக்க எதிரி வாகனத்தை அஜாக்கிரதையாகவோ அல்லது



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:12:03 +0530

கவனக்குறைவாகவோ இயக்கினார் என்பதை நிரூபணம் செய்வது இன்றியமையாததாகும்.

10.07) அ.சா.1 தனது சாட்சியத்தில் "**கடந்த 16.12.2013 ம் தேதி முருகானந்தம் சதீஸ் என்பவரும் இருசக்கர வாகத்தில் க.விலக்கு மருத்துவமனைக்கு வந்த சதீஸ் தாயாரை பார்த்துவிட்டு திரும்ப சதீஷ் ஓட்டிக்கொண்டும் முருகானந்தம் பின்னாடியும் உட்கார்ந்து மேற்கே நோக்கி போனார்கள் அவர்கள் பார்கும் தொலையில் என் மருமகன் பால்பாண்டி பைக் ஓட்டியும் நானும் சென்றேன் அப்போது குன்னூர் தாண்டி 100 மீ போய்கொண்டிருக்கும்போது மேற்கிலிருந்து கிழக்குநோக்கி டூரிஸ்ட் பஸ் வந்தது பஸ் அதிகவேகமாக வந்தது ரோட்டின் திசைமாறி வலது பக்கம் வந்து வண்டியில் மோதியது** "என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10.8) அ.சா.2 தனது சாட்சியத்தில் "**கடந்த 16.12.2013 ம் தேதி இரவு 08.15 மணிக்கு என் வண்டியில் நான் ஓட்டிக்கொண்டும் பின்னாடி என் மாமனாரும் உட்கார்ந்திருந்தார் கொஞ்சதுாரத்தில் முன்னாடி இறந்துபோன 2 நபர்களும் சதீஷ் ஓட்டிக்கொண்டும் முருகானந்தம் பின்னாடியும் உட்கார்ந்தார்குன்னுார் அருகே மேற்கிலிருந்து கிழக்கி நோக்கி கேரளா பஸ் வந்தது வந்தது பதட்டத்தில் நான் டிரைவரை பார்க்கவில்லை அவ்வாறு வந்த பஸ் முன்னால் வந்த பைக்கை அடித்துச்சென்றது ஆட்கள் கூடிவிட்டார்கள் "** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10.9)அடுத்தததாக எதிரி வேகமாகவோ அஜாக்கிரதையாகவோ வாகனத்தை இயக்கினார் என்பது குறித்து ஆராய்ந்து பார்த்தோம் ஆனால் என்று அது குறித்து ஆராய்ந்து பார்க்கையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **ரவிகபூர் எதிர் ராஜஸ்தான் அரசு [Crl. Appeal No. 1838/2009] என்ற வழக்கில்** பின்வருமாறு கூறியுள்ளது **"10. In order to examine the merit or otherwise of contentions (b) and (c) raised on behalf of the**



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:12:08 +0530

**appellant, it is necessary for the Court to first and foremost examine (a) what is rash and negligent driving; and (b) whether it can be gathered from the attendant circumstances. Rash and negligent driving has to be examined in light of the facts and circumstances of a given case. It is a fact incapable of being construed or seen in isolation. It must be examined in light of the attendant circumstances. A person who drives a vehicle on the road is liable to be held responsible for the act as well as for the result. It may not be always possible to determine with reference to the speed of a vehicle whether a person was driving rashly and negligently. Both these acts presuppose an abnormal conduct. Even when one is driving a vehicle at a slow speed but recklessly and negligently, it would amount to 'rash and negligent driving' within the meaning of the language of section 279 IPC.** எனவே மேற்கூறிய முன்தீர்ப்பின் அடிப்படையில் எதிரி வாகனத்தை அசட்டுத்தனமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்தார் என்று வழங்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை பொறுத்தே முடிவு செய்ய இயலும்.

10.10)பார்வை மகஜர் வரைபடம் வயிலாக விபத்து சாலையின் இடது புறமாக நடைபெற்றது தெரியவருகிறது. ஆனால் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில் " **நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்னென்ன விபரங்கள் எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது"** என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே விபத்து சாலையின் இடதுபுறத்தில் தான் ஏற்பட்டது என்று சந்தேகம் எழுகிறது.

10.11) இந்தவழக்கின் சாட்சியங்களின் நம்பகத்தன்மையை ஆராய இந்த நீதிமன்றம் **மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம் வடிவேலு தேவர் எதிர் மதராஸ் மாகாணம் 1947 என்ற வழக்கில் பின்வருமாறு** வழங்கிய வழிகாட்டுதல்களை துணைகொள்கிறது ***"Hence, in our opinion, it is a sound and well- established rule of law that the court is concerned with the quality and not***



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:12:14 +0530

***with the quantity of the evidence necessary for, proving or disproving a fact. Generally speaking, oral testimony in this context may be classified into three categories, namely: (1) Wholly reliable. (2) Wholly unreliable. (3) Neither wholly reliable nor wholly unreliable In the first category of proof, the court should have no difficulty in coming to its conclusion either way-it may convict or may acquit on the testimony of a single witness, if it is found to be above reproach or suspicion of interestedness, incompetence or subornation. In the second category, the court, equally has no difficulty in coming to its conclusion. It is in the third category of cases, that the court has to be circumspect and has to look for corroboration in material particulars by reliable testimony, direct or circumstantial"*** இவ்வாறாக சாட்சியங்களை மூன்றாக வகைப்படுத்தி உள்ளது.

10.12) அவ்வாறு ஆராய்ந்து பார்க்கையில் புகார்தாரரான அ.சா.1 தனது முதல் விசாரணையில் "**கடந்த 16.12.2013 ம் தேதி முருகானந்தம் சதீஸ் என்பவரும் இருசக்கர வாகத்தில் க.விலக்கு மருத்துவமனைக்கு வந்த சதீஸ் தாயாரை பார்த்துவிட்டு திரும்ப சதீஷ் ஓட்டிக்கொண்டும் முருகானந்தம் பின்னாடியும் உட்கார்ந்து மேற்கே நோக்கி போனார்கள் அவர்கள் பார்கும் தொலையில் என் மருமகன் பால்பாண்டி பைக் ஓட்டியும் நானும் சென்றேன் அப்போது குன்னூர் தாண்டி 100 மீ போய்கொண்டிருக்கும்போது மேற்கிலிருந்து கிழக்குநோக்கி டூரிஸ்ட் பஸ் வந்தது பஸ் அதிகவேகமாக வந்தது ரோட்டின் திசைமாறி வலது பக்கம் வந்து வண்டியில் மோதியது** என்று சாட்சியம் அளித்திருந்தாலும் முதல் விசாரணைக்கு மாறாக தனது குறுக்கு விசாரணையில்" **சம்பவ நடந்த இடம் தேசிய நெஞ்சாலை என்றால் சரிதான் நான் பார்த்தபோது டம் என்று சத்தம் கேட்டது என் மகன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார் புகார் எழுதியாது யார் யார் எழுதிக்கொடுத்தார்கள் என்பது தெரியாது நான் கையெழுத்து போட்டேன் மகன் இறந்து போன பதட்டத்தில் புகாரில் எழுதப்பட்ட விபரம்**



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:12:20 +0530

**தெரியாது என்றார் சரிதான் சம்பவ நடந்த நேரம் இருட்டு நேரம் என்றால் சரிதான் சம்பவத்தன்று என் மகன் சென்ற வண்டியின் பெயர் தெரியாது என்றால் சரிதான் எனது மகனுக்கு லைசென்ஸ் இல்லை என்றால் சரிதான்"** என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1 ன் சாட்சியம் முழுவதும் நம்பதகுந்ததாக தோன்றவில்லை எனவே இந்த நீதிமன்றத்திற்கு மற்றொரு சாட்சியத்தின் துணை தேவைப்படுகிறது. அவ்வாறு ஆராய்ந்து பார்க்கையில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.த.சா.**2** தனது குறுக்கு விசாரணையில் **"சம்பவ நடந்த நேரம், இருட்டு என்றால் சரிதான் இருட்டில் எதிரே வரும் வாகனங்கள் வெளிச்சத்தில் தெரியாது என்றால் சரிதான் மைத்துனர் அடிபட்டவுடன் நான் முதலில் பார்த்தபோது இரத்தவெள்ளத்தில் கிடந்தார்**."என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சியான அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் " **என் கணவர் விபத்து வழக்கில் இறந்தார் என்பதற்காக விபத்து நஷ்ட ஈடு வழக்கு போட்டேன் என்றால் சரிதான் விபத்து எப்போது எங்கு யாரால் நடந்தது என்பது தெரியாது என்றால் சரிதான்"** என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 தனது கையொப்பத்தினை ஒப்புகொண்டாலும் **"நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்னென்ன விபரங்கள் எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது, நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்** " என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வாறு ஒரு சாட்சி கூட எதிரி கவனக்குறைவாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ சாலையின் திசைமாறி வாகனத்தை இயக்கி சதீஷ் முருகானத்திற்கு இறப்பை ஏற்படுத்தினார் என்று திடமாக சாட்சியம் அளிக்கவில்லை.

10.13)சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.**1** மற்றும் அ.சா.**2**



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:12:26 +0530

மற்றும் அ.சா.3 , அ.சா.4 இவ்வாற உள்ளநிலையில் புலன்விசாரணை அதிகாரியான அ.த.சா.5 சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரி கவனக்குறைவாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ வாகனத்தை இயக்கி சதீஷ் முருகானத்திற்கு என்பவர்களுக்கு இறப்பை ஏற்படுத்தினார் என்று சந்தேகம் எழுகிறது. எனவே மேற்கூறிய சாட்சியங்களை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரிதான் குற்றத்தை செய்தார் என்று கருதுவது நீதிக்கு உகந்ததாக தோன்றவில்லை.

10.14)அரசு தரப்பு ஒரு வழக்கை நிரூபணம் செய்ய வேண்டும் என்றால் அந்த வழக்கில் எதிரி தான் குற்றத்தை செய்தார் என்று சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபணம் செய்ய வேண்டும். மேற்கூறிய சாட்சியங்களையும் வழக்கின் சூழ்நிலைகளையும் வைத்து பார்க்கும் பொழுது எதிரி கவனக்குறைவாகவோ அஜாக்கரதையாகவோ வாகனத்தை இயக்கியுள்ளார் என்று அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.ஆகையால் இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியின் மீது பிரிவு மற்றும் 304 (A) IPC இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானிக்கிறது.

11. <u>முடிவு</u>. மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு 304 (A) IPC (2 Count) -ன் கீழான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமில்லாமல் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் எனவே, எதிரியை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல என்றும் தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 255(1) ன் கீழ் விடுதலை செய்து இந்தநீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12.இவ்வழக்கு வழக்கு தடய சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:12:41 +0530

ஆகையால் வழக்கு தடய சொத்து குறித்து உத்தரவு இல்லை

13.எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது

இந்த தீர்ப்புரையானது, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் வைத்து, அவையறிய பகரப்பட்டது.

FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:12:47 +0530

நீதித்துறை நடுவர்,
ஆண்டிபட்டி

குறிப்பு:

1. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது,

2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை,

3. விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்து முன்னிலையானார்.

1. அரசுத்தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு. மாடசாமி |
| 2 | அ.சா.2 | திரு.பால்பாண்டி |
| 3 | அ.சா.3 | திருமதி.பிரேமா |
| 4 | அ.சா.4 | திரு.சரவணக்குமார் |
| 5 | அ.சா.5 | திரு.நல்லு |

2). அரசு தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | புகார் |
| 2 | அ.சா.ஆ.2 | பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து அ.சா.4 |
| 3 | அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:12:52 +0530

| | | |
|---|---|---|
| 4 | அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் |
| 5 | அ.சா.ஆ.5 | பிரேத விசாரணை அறிக்கை( சதீஷ்) |
| 6 | அ.சா.ஆ.6 | பிரேத விசாரணை அறிக்கை(முருகானந்தம்) |
| 7 | அ.சா.ஆ.7 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| 8 | அ.சா.ஆ.8 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| 9 | அ.சா.ஆ.9 | பிரேத பரிசோதனை அறிக்கை (சதீஷ்) |
| 10 | அ.சா.ஆ.10 | பிரேத பரிசோதனை அறிக்கை(முருகானந்தம்) |

<u>3). அரசுத் தரப்பு சான்று பொருள்:</u> இல்லை.

<u>4). எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள்:</u> இல்லை.

FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 19:12:56 +0530

நீதித்துறை நடுவர்

ஆண்டிபட்டி.